மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிசீலனை எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

திரு. செ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்குன்றத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கும் வேலை முடிந்து விட்டதா? எந்த வருடம் சென்னையிலிருந்து அது மாற்றப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் பகுதிக்கு வருகிற சிறைச்சாலை திறந்த வெளிச் சிறைச்சாலை அல்ல. சென்னையில் உள்ள மையச் சிறைச்சாலை மிக்க நவீன வசதிகள் அதிகமாக இருக்கக்கூடிய அளவிற்கு இந்தியாவிலேயே முன் உதாரணமாக இருக்கக்கூடிய சிறைச்சாலையாக அங்கு கிட்டத்தட்ட ஆறு கோடி ரூபாய்ச் செலவில் இது அமைக்கப்படுகிறது. வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. இன்னும் சில மாதங்களில் இது மாற்றப்படும். செங்கை மாவட்டத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலை வேங்கட மங்கலம் என்ற பகுதியில் அமைக்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது.

நெல்லிக்குப்பத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்.

690—(*வினா எண். 5222) திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நெல்லிக்குப்பத்தில் சப் 'மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் உயர்நீதி மன்றத்திடமிருந்தோ, வழக்குரைஞர் சங்கத்திட மிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ வரவில்லை. அவ்விதம் வரும்பொழுது நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

சத்துணவுக் கூடங்களுக்குச் சூரிய அடுப்புகள்.

691—(*வினா எண். 5443) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக்கூடங்களில் ''சூரிய அடுப்பு'' மூலம் சமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இம்முறை எப்பொழுது மேற்கொள்ளப் படும்?